செ.வெ.எண்: 62 **நாள்: 27.10.2026**

புதுக்கோட்டை மாவட்டம்

பாரத பிரதமர் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்கள் (PMSS) இணையதளம் வாயிலாக வரவேற்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

12ம் வகுப்பில் 60% மதிப்பெண்களுக்கு மேல் பெற்று தேர்ச்சி பெற்ற முன்னாள் படைவீரர்களின் மகன் மற்றும் மகள்களுக்கு 2026-27ம் கல்வியாண்டின் தொழிற்கல்வி (Professional Course / Technical Degree Courses) க்கான பாரத பிரதமர் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்கள் (PMSS) இணையதளம் வாயிலாக வரவேற்கப்படுகிறது. இத்திட்டம் 2026-2027 ஆம் கல்வியாண்டில் பயிலும் முதலாம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கு மட்டுமே பொருந்தும். கல்வி உதவித்தொகை ஆண்டுக்கு மாணவர்களுக்கு ரூ.30,000/-ம் மாணவிகளுக்கு ரூ.36,000/-ம் வழங்கப்படும். இவை முன்னாள் படைவீரர்களின் 2 சிறார்களுக்கு மட்டுமே பொருந்தும்.

மேலும் விபரங்களுக்கு ksb.gov.in என்ற இணையதள முகவரியில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம். இக்கல்வி உதவித்தொகைக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் 31.12.2026.

மேலும் விபரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தினை அணுகலாம். மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai